Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 145 | புதன்கிழமை 20 ஏப்ரல் 2022 | சித்திரை 7 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை : ரூ.40

# பொலிஸ் துப்பாக்கிச் சூடு ஒருவர் சாவு; 7 பேர் படுகாயம்!

## ரம்புக்கனையில் நேற்று இரத்தக்களரி நால்வரின் நிலைமை மோசம்



கொழும்பு, ஏப்ரல் 20

கேகாலை,ரம்புக்கனையில் போராட்டம் நடத்திய மக்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பலர் படுகாயமடைந்துள்ளனர். 15

## இன்று முதல் நாடு முடங்கும்?

கொழும்பு, ஏப்.20

இலங்கையில் இன்று முதல் ஒரு வார காலத்துக்கு ஹர்த்தாலை நடைமுறைப்படுத்த தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன. இந்த அழைப்புக்கு பல தரப்புக்களும் ஆதரவு வழங்கியுள்ள நிலையில், நாடு முழுவதும் முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 15



## நேற்றைய விலையேற்றங்கள்!

- ★ கோதுமை மா
- ★ பாண்
- ★ கொத்து ரொட்டி
- ★ உணவுப் பார்சல்
- ★ பஸ் கட்டணம்

கொழும்பு, ஏப்.20

கோதுமை மாவின் விலை நேற்று முதல் கிலோ ஒன்றுக்கு 40 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

450 கிராம் நிறையுடைய பாணின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. 450 கிராம் பாணின் விலை 150 ரூபா என்றும், பணிஸ் வகைகளின் விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட பேக்கரி உரிமையாளர் 15

## தீ வைக்க முயன்றதாலேயே மக்கள் மீது துப்பாக்கிச் சூடு

### விளக்கம் கொடுக்கிறது பொலிஸ்

கொழும்பு, ஏப்.20

ரம்புக்கனைவில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஓட்டோ ஒன்றுக்குத் தீ வைத்ததாலும், அங்கிருந்த எரிபொருள் பவுஸர் வாகனத்துக்குத் தீ வைக்க முயன்றதாலும் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். 15

## கொதித்தது இலங்கை!

### வீதிக்கு இறங்கிய மக்கள் ரயர்களை எரித்து ஆக்ரோஷம் போக்குவரத்து துண்டிப்பு

கொழும்பு, ஏப்.20

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு, எரிபொருள் உட்படப் பல பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு என்பவற்றால் கொதிப்படைந்துள்ள மக்கள் நேற்று நாடளாவிய ரீதியில் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், தற்போதைய அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். 15

## அமெரிக்கா கவலை

கொழும்பு, ஏப்.20

ரம்புக்கனையில் இருந்து வெளியான பயங்கரமான செய்தியைக் கேட்டுக் கவலையடைகின்றேன் என்று 15

## ஊரடங்கு!

கொழும்பு, ஏப்.20

ரம்புக்கனை பொலிஸ் பிரிவில் உடனடி 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை அழித்தது பஸிலே

- அந்தக் காகம் எம் கருத்தை புறக்கணித்தது
- விமல் வீரவன்ஸ சபையில் நேற்று முழக்கம்

**கொழும்பு, ஏப். 20**

**நாட்டின் பொருளாதாரத்தை அழித்தது பஸில் ராஜபக்சவே என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**



நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;
பிரதமர் மஹிந்த ராஜபக்ச உள்ளடங்கலான இந்த அரசும் பதவி விலகி, சர்வகட்சி இடைக்கால அரசை அமைக்க இடமளிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டில் ஏற்படப்போகும் நெருக்கடி நிலைமைக்குப் பொறுப்புக்கூறவேண்டும்.'
நாட்டு மக்கள் இன்று வீதிக்கு இறங்கி விட்டனர், நகரங்களை முடக்கி வருகின்றனர்.
இவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் கூடும் என்று நாம் அமைச்சரவையில் சுட்டிக்காட்டினோம்.
ஆனால், அந்தக் காகம் (பஸில் ராஜபக்ச) எமது கருத்துக்களை உள்வாங்கவில்லை. பொருளாதாரம் சிறப்பான வழியில் பயணிப்பதற்கான மாயையை உருவாக்கியது.
அமைச்சரவையில் இருந்தவர்கள் அதனை ஏற்றுச் செயற்பட்டனர். அந்த கர்மவினையைத்தான் இன்று எதிர்கொண்டுள்ளனர். பதவிகள் இன்றி, பின்வரிசையில் அமரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
சிவப்புச் சால்வை போட்ட நபர்களால் வீதியில் இறங்கிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எம்மை அமைச்சரவையில் இருந்து நீக்கினர், இன்று எவரும் அங்கு இல்லை -என்றார். (க-44)

# வெளிக்களப் பணியாளருக்கு முன்னுரிமையில் எரிபொருள்

## அரச அலுவலர்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஏப். 20
வெளிக்களப் பணிக்குச் செல்லும் அலுவலர்களுக்கு எரிபொருள்களை முன்னுரிமையில் வழங்க வேண்டுமென்று பிரதேச செயலக அலுவலர்கள் கோரிக்கை விடுத்தனர்.
நாட்டில் நிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வால் அரச பணியாளர்கள் பேருந்துகளில் பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் வெளிக்களப் பணிகளில் ஈடுபடுவோர், அலுவலகங்களுக்குச் செல்லாமல் தலைமை அலுவலகங்களில் கடமையாற்ற வேண்டியுள்ளது.
எனவே வெளிக்களப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். (ம-14)

# பதவிவிலகக் கோரும்போது புதிய அமைச்சரவை ஏன்?

## மக்கள் ஏற்றுக்கொள்ளார் என்கிறார் கொழும்பு பேராயர்

கொழும்பு, ஏப். 20
தற்போதைய அரசை பதவி விலகுமாறு மக்கள் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர். இந்தத் தருணத்தில் புதிய அமைச்சரவை எதற்கு?. மக்கள் இதனை ஏற்கப்போவதில்லை என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
அரசு ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்துள்ளது. அரசின் நடவடிக்கைகளை எந்த வகையிலும் மன்னிக்க முடியாது. அரசைப் பதவி விலகுமாறும், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால அரசை நியமிக்குமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஜனாதிபதி அவ்வாறான கோரிக்கைகளை உதாசீனம் செய்து புதிய அமைச்சரவையை நியமித்துள்ளார். இந்த நடவடிக்கை பொதுமக்களை ஏமாற்றும் முயற்சியே. அமைதியான போராட்டக்காரர்களைக் கலைப்பதற்காக குண்டர்கள் பலாத்காரத்தை நாடியதாகக் கூறப்படும் முயற்சிகள் பற்றியும் அறிந்தோம். அத்தகைய நடவடிக்கை ஜனநாயகமற்றது மற்றும் ஏற்றுக்கொள்ளமுடியாதது -என்றார். (க-இ)

# 40 எம்.பிக்களுடன் சுயாதீன எதிர்க்கட்சி

அரசில் இருந்து விலகிய 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயாதீனமாக எதிர்க்கட்சியில் இணைந்துள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. புதிய அமைச்சரவையை நியமிப்பதன்மூலம் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று நம்பவில்லை -என்றார். (க-இ)

# பஸில், கோத்தாவின் மனைவியருக்கு அமெரிக்காவில் சட்டவிரோத சொத்து?

## விசாரணை நடத்துமாறு எப்.பி.ஐயிடம் முறைப்பாடு

கொழும்பு, ஏப். 20
முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவின் மனைவி மற்றும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் மனைவி ஆகியோர், இலங்கை மக்களின் நிதியைப் பயன்படுத்தி அமெரிக்காவில் சொத்துக்களை சேகரித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.
இது தொடர்பில் அமெரிக்காவின் எப்.பி.ஐ.யிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. அவர்களால் அவ்வாறு சேகரிக்கப்பட்ட சொத்துக்களை நியாயப்படுத்த அவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைப்பதில்லை என்றும் எனவே, இந்த விடயம் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணைகளை முன்னெடுத்து, குற்றவாளிகளை சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும் என்றும் எப்.பி.ஐ.யிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ம)

# இளைஞர்களின் கோரிக்கையை உள்வாங்கித் தீர்வு காணுங்கள்

## ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 20
காலிமுகத்திடலில் போராடும் இளைஞர்கள் ஆயுதத்தை கையில் எடுக்கவில்லை, கிளர்ச்சி செய்யவும் இல்லை. மாறாக அரசமைப்புக்குள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவே முற்படுகின்றனர். எனவே, இளைஞர்களின் கோரிக்கைகளையும் உள்வாங்கி, தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;
நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் ஒழுக்கமாக, பொறுப்புடன் செயற்படவேண்டும். எமது நடத்தைமூலமே மக்கள் மத்தியில் மரியாதையைப் பெறக்கூடியதாக இருக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் நாடாளுமன்றையும் சுற்றிவளைத்து போராட வேண்டிய நிலை உருவாகும். எதிரணிக்குரிய பொறுப்பை நாம் சரிவர நிறைவேற்றுவோம். ஆளுங்கட்சி தமக்கான பொறுப்பை நிறைவேற்றவேண்டும். புதிய அமைச்சர்கள் நால்வர் தான் சபைக்கு வந்துள்ளனர். இந்த நிலைமை தொடரக்கூடாது. அமைச்சர்கள் பங்கேற்று, நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும். நாடு நெருக்கடியான கால கட்டத்திலேயே உள்ளது. தற்போதைய நெருக்கடி நிலைமை மேலும் உக்கிரமடையலாம், வரிசைகள் முடியப்போவதில்லை. எனவே, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வழிமுறைகள் பற்றி ஆராயவேண்டும். பாதீட்டில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரமே ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை கிடைத்தது. அதன்பின்னரே 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. எனவே 19ஆவது திருத்தம் மீள நடைமுறைப்படுத்தப் படவேண்டும், குழுக்கள் முறைமை உருவாக்கப்பட வேண்டும். அதில் இளைஞர்களின் பிரதிநிதிகளையும் உள்வாங்க வேண்டும் -என்றார். (க-44)

# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவ வேண்டும்

## இந்தியா வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 20
இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க, சர்வதேச நாணய நிதியம் உதவி வழங்க வேண்டுமென்று இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வேண்டுகோள் விடுத்தார்.
சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜீவாவுடனான சந்திப்பின்போது, அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் வேண்டவே வேண்டாம்!

## நாடாளுமன்றத்தில் சஜித் நேற்று மீண்டும் முழக்கம்

**கொழும்பு, ஏப். 20**

**தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு சில்லறைத்தனமான தீர்வை முன்வைக்க வேண்டாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை முழுமையாக நீக்கப்படவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க வேண்டாம் என பிரதமர் கூறுகின்றார். எதிரணி அவ்வாறு செயற்படவில்லை. அரசாங்கம்தான் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படுகின்றது. நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையைத் தீர்க்க ஐக்கிய மக்கள் சக்தியால் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. திட்டமிட்ட அடிப்படையில் நாடு வீழ்த்தப்பட்டுள்ளது. இதற்கு அரசு முழுமையாகப் பொறுப்புக்கூறவேண்டும்.

எமக்கு சில்லறைத்தனமான தீர்வுகள் வேண்டாம். வரிசை யுகம் எப்போது முடியும் என்பதை பிரதமர் தெளிவாகக் கூறவேண்டும். 19ஆவது திருத்தத்தால் திருப்தி கொள்ள முடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும். மக்களின் போராட்டத்துக்கு வெற்றி கிடைக்க வேண்டும். எதிரணிப் பக்கம் அமர்ந்துள்ள முற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்படுவோம் - என்றார். (க-44)

## ஸஹ்ரானின் வாகனத்தை பயன்படுத்தியமை எதற்கு?

கொழும்பு, ஏப். 20



ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புக்கு தலைமை தாங்கிய ஸஹ்ரான் பயன்படுத்திய வாகனத்தை, பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பயன்படுத்தியமை ஏன்? என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, "இதுதொடர்பில் எனது செயலாளரிடம் வினவினேன். அந்த வாகனம், அரசுடமையாக்கப்பட்டுள்ளது. அதனை, விசேட அதிரடிப்படை பயன்படுத்தியுள்ளது. நான் பயன்படுத்தவில்லை" - என்றார். (ம)

## கடன் தரப்படுத்தலிலும் இலங்கை மதிப்பிழப்பு!

கொழும்பு, ஏப். 20

இலங்கையின் கடன் தரப்படுத்தலை மதிப்பிறக்கம் செய்துள்ளதாக சர்வதேசத் தரப்படுத்தல் அமைப்புகளில் ஒன்றான 'மூடிஸ் இன்வெஸ்ட்டர்' அறிவித்துள்ளது.

இலங்கை அதன் வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்தாமல் இருப்பது தொடர்பில் கடந்த வாரம் அறிவித்ததை அடுத்து மேற்படி மதிப்பிறக்கம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மூடிஸ் இன்வெஸ்டர் சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் மிகவும் குறைந்த அந்நியச் செலாவணி இருப்பு மற்றும் மிகவும் வலுவிழந்த கடன் பெறும் நிலை ஆகியனவும் இந்த மதிப்பிழப்புக்குக் காரணம் என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)

# கோத்தாபய அரசாங்கத்துக்கு சர்வதேச உதவிகள் கிட்டாது

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 20

இலங்கையில் உறுதியான அரசாங்கம் உருவாக்கப்படும் வரையில், சர்வ்தேசத்தின் எந்தவொரு ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது பேச்சுக்களை முன்னெடுத்தாலும் கூட, நாளைக்கே அவர்கள் உதவிகளைப் பெற்றுக்கொடுக்கப்போவதில்லை. அதற்கு குறைந்தபட்சம் 9 மாதங்களாவது எடுக்கும். அதுவரையில் நிலைமைகளைச் சமாளிக்க அரசாங்கத்தால் எவ்வாறான வேலைத்திட்டங்களை கையாள முடியும் என்பதே தற்போதுள்ள கேள்வியாகும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக நாம் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறி வருகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டியதன் அவசியம் குறித்தும் நாம் தொடர்ச்சியாக சுட்டிக் காட்டி வந்துள்ளோம். அப்போதெல்லாம் ஜனாதிபதி எமது கருத்துக்களைக் கேட்கவில்லை. இப்போதாவது ஜனாதிபதி முன்வந்து பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும். தீர்வை முன்வைக்க வேண்டும்.

பிரச்சினைகளுக்கு அஞ்சி, கேள்விகளுக்குப் பதில் தெரிவிக்காது ஓடி ஒளிந்து கொள்வதால் தீர்வுகள் கிடைக்கப்போவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் உடனடியாகக் கிடைக்கப் போவதில்லை. எனவே நாட்டு மக்களின் கோரிக்கையை ஏற்று, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் அல்லது அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் என்ன என்பதையாவது தெரிவிக்க வேண்டும் - என்றார். (க-இ)




**நேற்று ஆரைப் பார்த்தாலும் "நாளைக்கு ஹர்த்தாலோ?" என்ட கேள்விதான். உண்மையில ஹர்த்தாலுக்கு ஆரும் அழைப்பு விடேலை. அரசாங்க வேலை செய்யிறவை அங்கம் வகிக்கிற 300 தொழிற்சங்கங்கள் இணைஞ்சு, நாடு முழுக்க வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவிச்சிருக்கினம். ஒரு கிழமைக்கு இந்தப் போராட்டம் நீடிக்கப் போகுது. 300 தொழிற் சங்கம் எண்டேக்க கிட்டத்தட்ட எல்லா அரசாங்க வேலை செய்யிறவையும் போராடப் போயினம்.**


**ஏற்கனவே காலிமுகத்திடல் போராட்டத்தாலையே முழி பிதுங்கிற அரசாங்கத்துக்கு, இப்பிடி நாடு முழுக்க 300 தொழிற்சங்கங்களும் போராடத் தொடங்கினால் அதைத் தாங்கவே ஏலாது. அதுக்காக இந்த ஒரு கிழமையும் நாட்டை முடக்கிற அறிவிப்பை இல்லாட்டி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் யோசிச்சிருக்குது. ஆனால் அப்பிடிச் செய்தாலும் தங்கட தோல்வியை அரசாங்கம் தானே ஒத்துக் கொண்டது மாதிரி இருக்கும். அதாலதான் ரம்புக்கனையில சூட்டுச் சம்பவம் நடந்திருக்குமோ? எண்டு கனபேர் சந்தேகப்படுகினம். ஏனெண்டால் மீரிகனவில ஜனாதிபதியின்ர வீட்டைச் சுத்திவளைச்சு சனங்கள் போராடேக்க, பஸ், பொலிஸ் ஜீப்பெல்லாம் எரிச்சவை. இந்த நாட்டின்ர அதியுச்சப் பதவியில இருக்கிறவரின்ர வீட்டைச் சுத்தி நிண்டு கோஷம் போடேக்கையோ இல்லாட்டி அவரின்ர வீட்டுக்கு முன்னால வாகனங்களை எரிக்கேக்கையோ கையைக் கட்டிக் கொண்டு நிண்ட பொலிஸ், ரம்புக்கனையில ஏதோ பவுஸருக்கு சனம் நெருப்பு வைக்க வெளிக்கிட்டதால தான் சுட்டனாங்கள் எண்டு சொல்லிறதை ஆரும் நம்புவினமோ? அதோட பொலிஸ் சுடுகிறதெண்டால் ஒண்டில் மேல்வெடி வைச்சிருக்க வேணும் இல்லாட்டி காலுக்கு கீழ சுட்டிருக்க வேணும். ஆனால் ரம்புக்கனையில செத்தவருக்கும், காயப்பட்டவைக்கும் உடம்பிலதான் குண்டு பாய்ஞ்சிருக்கு. அப்ப பிளான் பண்ணித் தான் சுட்டிருக்கினம் எண்டது நிரூபணமாயிட்டுது. இப்பிடிச் சுட்டு வெருட்டினாத்தான் நாளைக்கு எந்தத் தொழிற்சங்கமும் ஆர்ப்பாட்டம், பேரணி எண்டு றோட்டுக்கு வரமாட்டினம் எண்டு அரசாங்கத்துக்கு ஆரோ பிழையான ஐடியா குடுத்திருக்கினம் போல. ஏனெண்டால் இதுவரைக்கும் ஆர்ப்பாட்டத்துக்கு போகாதவைகூட, நேற்றையான் சூட்டுச் சம்பவத்துக்கு பிறகு கொந்தளிச்சு, றோட்டில இறங்கிப் போராடப் போயினம்.**

**ஏற்கனவே பெற்றோல், டீசல் விலையேத்தினதுக்கு நேற்று கடும் போராட்டம். கன இடங்களில போய்வரக்கூட ஏலாத அளவுக்கு றோட்டுக்கு குறுக்க வாகனங்களை விடுகிறதும், ரயர் கொளுத்திறதும் எண்டு இவ்வளவு நாளும் காலிமுகத்திடலில மட்டும் நடந்த போராட்டம் நேற்றையோட இலங்கை முழுக்க பரவிட்டுது. ரம்புக்கனை சம்பவத்தோட இன்னும் அது வேகமாகப் பரவும். ஆனால் எங்கட அரசாங்கத்துக்கு சனங்களின்ர கொதிப்பு விளங்கினாலும் அதை வெளியில காட்டாமல், பதவியை விட்டு விலகமாட்டம் எண்டு கடுப்பு வேற காட்டுகினம். "சட்டத்தை மீறி, வாகனத்தை எரிக்க வெளிக்கிட்டதாலதான் பொலிஸ்காரர் மிகக் குறைஞ்ச பலத்தைக் காட்டினவை" எண்டு பொலிஸ் தரப்பு ரம்புக்கனை சம்பவம் பற்றிச் சொல்லியிருக்கு. மிகக் குறைந்த பலமே துவக்கால சுடுகிறதெண்டால், மிக அதிக பலம் கொத்துக் குண்டு போடுறதோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு: பலதரப்பும் கடும் கண்டனம்!

கொழும்பு, ஏப்.20

ரம்புக்கனையில் நடந்த சம்பவம் தொடர்பில் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தரப்பினரின் வன்முறையும் அமைதியான போராட்டக்காரர்களின் உரிமைகளைத் தடுக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரம்புக்கனையில் நடந்த சம்பவத்துக்கு கவலையை வெளியிட்டுள்ள இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன், ரம்புக்கனையில் இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார்.

அதிகபட்ச கட்டுப்பாடு இப்போது தேவைப்படுகின்றது என்றும், வன்முறையைத் தூண்டுபவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரான மஹேல ஜெயவர்த்தன ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

மக்கள் தவறு செய்திருந்தால் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுதான் ஜனநாயகமா? இதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இலங்கை பொலிஸ் உங்களை நினைத்து வெட்கப்படுகின்றேன் என்று அவர் தனது ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரிய கண்டனம் தெரிவித்துள்ளார்.

தனது ருவிற்றர் பதிவில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், ஈடு செய்ய முடியா இழப்புடன் ரம்புக்கனையில் நடத்தப்பட்ட கொடூரமான மற்றும் கோழைத்தனமான செயலை நினைத்து வருந்துகின்றோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



ரம்புக்கனையில் இடம்பெற்ற போராட்டத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த இளைஞரின் நினைவாக காலிமுகத்திடல் போராட்டத்தளத்தில் நேற்று இரவு நினைவேந்தல் இடம்பெற்றது. (எ-இ)

## விபத்தில் சிக்கிய இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், ஏப்.20

விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த 22 வயது இளைஞர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, நெடுங்கேணி, 17ஆம் கட்டையைச் சேர்ந்த கிருபாகரன் கிருசாந்தன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி நெடுங்கேணியில் நடந்த விபத்தில் இவர் படுகாயமடைந்திருந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

(அ-எ-26)

## குறைந்தபட்ச பலத்தையே பொலிஸ் பிரயோகித்ததாம்

கொழும்பு, ஏப்.20

ரம்புக்கனையில் பொலிஸர் அதிகபட்ச பலத்தைப் பயன்படுத்தினார்களா என்பது தொடர்பில் ஆராயப்படும் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

30 ஆயிரம் லீற்றர் எரிபொருள் கொண்ட பவுஸர் ஒன்றுக்கு குழு ஒன்று தீ வைக்க முனைந்தது என்றும், அதைத் தடுப்பதற்காக பொலிஸாருக்கு குறைந்தபட்ச பலத்தை பிரயோகிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும் பொலிஸ் மா அதிபர் விளக்கம் அளித்துள்ளார்.


எவ்வாறாயினும் இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் தலைமையகம் மட்டத்திலான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மக்களைத் துன்புறுத்தும் ஆட்சியாளர்களை விரட்டியடிப்போம்' என்ற தொனிப்பொருளில் மொறட்டுவையிலிருந்து கொழும்பு நகர மண்டபம் வரை மிகப்பெரும் கண்டனப் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம)



ஹற்றன் பேருந்து நிலையத்தில் நேற்று நீண்ட தூரப் பேருந்துகள் சேவையில் ஈடுபடாமையால், நாட்டின் பல பகுதிகளில் இருந்து தொழில் மற்றும் தனிப்பட்ட பயணங்களுக்கு வந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-இ)



எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்து மாவனெல்லையில் பதற்றம் ஏற்பட்டது. ரயர்கள் வீதியில் போடப்பட்டு எரியூட்டப்பட்டன. (ம)



அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நேற்று சடுதியாக தீவிரமானதால் கொழும்பு கோட்டை, புறக்கோட்டை மற்றும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. (ம)






அரசாங்கத்தைக் கண்டித்து, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் உறுப்பினர்கள் மற்றும் கல்வியாளர்கள் கொழும்பு காலிமுகத்திடலை நோக்கிப் பேரணியில் ஈடுபட்டுள்ளனர். (க-இ)












பொதுமக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்களால் முடக்கப்பட்ட ரயில் நிலையங்கள் மற்றும் பொதுப்போக்குவரத்துகள். (ம)




எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு பிரதான வீதியில் மக்கள் நேற்று நீண்ட நேரமாக வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)





விலையைக் குறை அல்லாதுவிடின் வெளியேறு. பல இடங்களில் மக்கள் நேற்றுக் கோபாவேசம். (ம)





விலையைக் குறை அல்லாதுவிடின் வெளியேறு. அநுராதபுரத்தில் மக்கள் நேற்று கோபாவேசம். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 5ஆவது நிகழ்வாக 'திருநாவுக்கரசு நாயனார் குருபூசை' நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது. திருநாவுக்கரசு நாயனார் குருபூசை, நாவலர் குருபூசை மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கருப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவை ஆற்றவுள்ளார். அத்துடன் சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.
இந்து கலாசார உத்தியோகத்தர் விஜிதா தவசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதமவிருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் வீ.கருணலிங்கம், சிறப்பு விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் மா.அனந்தலட்சுமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-14)

# அன்னை பூபதிக்கு நேற்று தாயகத்தில் நினைவேந்தல்

**யாழ்ப்பாணம், ஏப். 20**
**தமிழ்த் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதியின் 34ஆவது நினைவுதினம் தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.**



**யாழ். பல்கலையில்**
யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வளாகத்திலும் அன்னை பூபதியின் நினைவேந்தல் நேற்று இடம்பெற்றது. இதன் போது பல்கலைக்கழக மாணவர்கள் அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினர். ஈகைச்சுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் அவர்களால் செலுத்தப்பட்டது.
இந்தியப் படை உடனடியாகப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் என்றுகோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னணியின் சார்பில் அன்னைபூபதி அகிம்சை வழியில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றிலில் ஆரம்பித்தார். சரியாக ஒரு மாதத்தின் பின்னர் ஏப்ரல் 19ஆம் திகதி அவர் உயிரிழந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.



**கிளிநொச்சியில்**
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அலுவலகமான அறிவகத்தில் நேற்று முன்தினம் காலை நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நினைவுச் சுடரை ஏற்றி அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலையை அணிவித்தார். (ம-14-125)

## கிளிநொச்சி பொதுச்சந்தையில் கடைகள் உடைத்துத் திருட்டு

கிளிநொச்சிச் சந்தையில் நேற்று அதிகாலை 3 மணிக்கு 10 கடைகள் உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். உடைக்கப்பட்ட கடைகளில் பெரும்பாலும் புடவைக்கடைகள். அத்துடன், பாத்திரக் கடைகள், அழகுசாதனக் கடைகள் மற்றும் தேநீர்க் கடை என்பன உடைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-113)

## மாணவர்களின் பேச்சுப் போட்டி

மணியம்தோட்டம் இணைந்த கரங்கள் அமைப்பின் ஏற்பாட்டில் 6 வயது தொடக்கம் 20 வயது வரையான மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி அண்மையில் மணியம்தோட்டத்தில் நடைபெற்றது. 3 அமர்வுகளாக நடைபெற்ற போட்டியில் 6 பிரிவுகளைச் சேர்ந்த பல மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**வெற்றிபெற்றோர் விவரம்**
பிரிவு-1
**ற.அஸ்வின்**
பிரிவு-2
**ஜெ.மேரி தர்சாஜினி,**
பிரிவு-3
**ஜெ.ஜெர்சன்**
பிரிவு-4
**வி.அபிஷா**
பிரிவு-5
தமிழ்மொழி
**ற.விதுஷா,**
பிரிவு-5
ஆங்கிலமொழி
**[illegible]**
(ம-14-27)






# மன்னார் மருத்துவமனைக்கு உபகரணங்கள் கையளிப்பு

மன்னார், ஏப். 20
மன்னார் மாவட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு உபகரணங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.
சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 75 வீத நிதியிலும் அமெரிக்கா (ஐ.என்.எச்.ஓ), அவுஸ்திரேலியா எந்திரி (ஈ.எஸ்.எவ்) அமைப்புக்களின் 25 வீத நிதியிலும் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களே இவ்வாறு கையளிக்கப்பட்டன. (ம-14-60)

# இலவச குடிதண்ணீர் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஏப். 20
கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பொன்னகர் கிராம அலுவலர் பிரிவிலும் பூநகரி ஞானிமடம் கிராம அலுவலர் பிரிவிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இலவச குடிதண்ணீர் விநியோகத்துக்கான நடமாடும் சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.
இதற்கமைய பூநகரி ஞானிமடம் கிராம அலுவலர் பிரிவில் எதிர்வரும் 26ஆம் திகதியும், பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளிலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் வீடுகளுக்கு வருகை தந்து விண்ணப்பப்படிவங்களை வழங்கவுள்ளனர்.
விண்ணப்படிவங்களை பெற்றுக்கொள்கின்ற பொதுமக்கள் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு அமைவாக அவற்றைப் பூர்த்தி செய்து வைப்புப் பணம் ஆயிரம் ரூபாவுடன் மீளக் கையளிக்க வேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக் கொள்ளுமாறும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் கோரியுள்ளது. (ம-14-214)

# கல்வியாளர்களுக்கு பயிற்சி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 20
தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றும் கல்வி அபிவிருத்திசார் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு, திறன் பலகை பயன்பாடு தொடர்பான பயிற்சிச் செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது.
தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த 10 கிராமப்புற பாடசாலைகளுக்கு முதல் கட்டமாக தென்மராட்சி பவுண்டேசன், ரட்ணம் பவுண்டேசன் என்பவற்றின் நிதிப்பங்கீட்டில் திறன் பலகைகளுடனான திறன் வகுப்பறைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
இதன் முதற்கட்டமாக வலயம் சார் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களையும் பயிற்றுவிக்கும் செயலமர்வு நடத்தப்பட்டுள்ளது. செயலமர்வில் வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், ஆசிரிய மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் வலயத்தின் கணினி கற்கை நிலைய வளவாளர்கள் என 30 பேர் கலந்து கொண்டனர். (க-இ)



# "தென் உதயதாரகை" நூல் வெளியீட்டு விழா

சாவகச்சேரி, ஏப். 20
சந்தக்கவிமணி புலவர் அமரர் சின்னையினாரின் "தென் உதயதாரகை" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் ஈழத்துக் கவிஞர் சோ.பத்மநாதன் நூல் வெளியீட்டுரையை நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை சிரேஷ்ட ஊடகவியலாளர் உமாச்சந்திரா பிரகாஷ் பெற்றுக் கொண்டார். (ம-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துர்க்கனவுகள்!

இலங்கை மக்களுக்கு நேற்றைய நாள் மற்றுமொரு துர்க்கனவாக மாறியிருக்கின்றது. இந்த நாட்டில் தமக்கு எதிர்காலம் இல்லை என்ற தீர்க்கமாக முடிவுக்கும் உச்சக்கட்ட விரக்தி நிலைக்கும் மக்கள் தள்ளப்படும் அளவுக்கு அடுத்தடுத்த விலையேற்றங்கள் அவர்களின் தலையில் இடியாக இறங்கியிருக்கின்றன. அதைவிட இன்னொரு இடியாக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீதான துப்பாக்கிச்சூடும், உயிர் பறிப்பும் நிகழ்ந்திருக்கிறது.


எப்போதெல்லாம் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றனவோ அப்போதெல்லாம் இதர அத்தியாவசியப் பொருள்களின் சேவைகளின் விலைகளும் தன்னியல்பாக அதிகரிக்கவே செய்யும். காரணம், இன்றைய நவீன உலகில் எரிபொருள் என்பது துணைப்பொருளாக அல்லாமல் அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்டது. இது ஒரு சங்கிலித் தொடர்போன்ற நிலைமை. இதனால், எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பேருந்துக் கட்டணங்கள், பாண் விலை, கோதுமை மா விலை என்பனவும் நேற்றைய நாளில் சடுதியான ஏற்றம் கண்டுள்ளன.

ஏற்கனவே அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத நிலையில், கோத்தாபய அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டங்கள் நேற்றைய விலை அதிகரிப்புகளுடன் இன்னுமின்னும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்திருக்கின்றன. காலி முகத்திடலில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போராட்டங்கள் நேற்றுடன் மேலும் தீவிரமடைந்து அவை சமூகமயப்பட்டிருக்கின்றன. போராட்டங்கள் கலவரங்களாக மாறுவதற்குரிய அனைத்து ஏதுநிலைகளும் நேற்றுத் தென்பட்டிருக்கின்றன. உண்மையில் இப்போதுதான் கதையே ஆரம்பித்திருக்கின்றது. அதன் தொடக்கப்புள்ளியாகவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி, ஒருவரின் உயிரைப் பறித்திருக்கிறார்கள். ஏழுபேரைப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர். இந்த உயிர்ப்பலி போராட்டத்தை ஒருபோதும் அடக்கப்போவதில்லை. மாறாக ஆர்ப்பாட்டக்காரர்களை இன்னமும் சீண்டி, எல்லோரையும் வீதிக்கு இறக்கப் போகின்றது. அதே வேளை இனிமேல் ஆர்ப்பாட்டங்களை கைகட்டி வேடிக்கை பார்க்காமல், வன்முறையை ஏவியேனும் அடக்குவதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது என்பதையே ரம்புக்கனை சம்பவம் கட்டியங் கூறுகின்றது.

ஆனால் எங்கெல்லாம் அடக்குமுறைகள் நிகழ்கின்றனவோ அங்குதான் கிளர்ச்சிகளும் வெடிக்கின்றன. அரசாங்கம் தன் சொந்த மக்கள் மீது துப்பாக்கிகளைத் திருப்புமானால், அதைவிட முட்டாள்தனம் வேறொன்றுமிருக்கமுடியாது. அதுவும், சர்வதேச நாணய நிதியத்திடம் பிச்சை எடுக்க இலங்கை முயல்கின்ற இந்தத் தருணத்தில், அந்த முயற்சிக்கும் ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு பெரும் தடையாகவே அமையும். அதைத்தான் அமெரிக்கத் தூதரின் கண்டனமும் உறுதி செய்கின்றது. மக்களின் குருதியைக் குடித்துக் கொண்டு எந்த அதிகாரமும் நிலைத்திருக்க முடியாது. நேற்றைய உயிர்ப்பலி, இனிமேல் நாடெங்கும் பெரும் பிரளயத்துக்கே வித்திடலாம். மக்களின் பெரும் கோபத்தீயின் முன்னால் எப்பேர்ப்பட்ட அதிகாரமும் பொசுங்காமல் இருந்ததில்லை. இலங்கையிலும் மக்களின் முன்னால் அதிகாரம் மண்டியிடும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதாகவே படுகின்றது.

## நாளொரு நல்வார்த்தை

"எவராவது தான் தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால் அவர் தன் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்" - ஐன்ஸ்டைன்



நம்பிக்கையில்லாப் பிரேரணை

# கள்வர்கள் கூட்டத்தை ஆதரிப்பதே நடுநிலைமை

வேலுகுமார் எம்.பி. சாட்டை



**கொழும்பு, ஏப். 20**

**'மக்கள் பக்கமா? கள்வர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் ஆகும். நடுநிலைமை என்பதும் கள்வர் கூட்டத்தை ஆதரிப்பதே' என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாடு முழுவதும் நாளுக்கு நாள் தன்னெழுச்சிப் போராட்டம் வீரியம் பெற்று வருகின்றது. மக்களின், 'கோத்தா போ' என்ற கோஷம் வலுப்பெறுகிறது. 'ராஜபக்சக்களை விரட்டியடிப்போம், கொள்ளையடித்த பணத்தைத் திரும்பப் பெறுவோம்' என்று பல மட்டங்களிலும் போராட்டங்கள் வெடித்திருக்கின்றன. ஆனால், அரசாங்கம் தனது வழமையான அசமந்தப் போக்கையும் இழுத்தடிப்பையும் செய்து வருகின்றது. வீதிகளிலே மக்கள் அரசாங்கத்தை வீட்டுக்கனுப்பப் போராடுகின்றபோது, அதற்கு மதிப்பளித்து, அரசமைப்புக்கு அமைய நாடாளுமன்றத்தில் நாம் அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலையை செய்யவேண்டி இருக்கின்றது. அதற்காக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.
மக்கள் பக்கமா? கள்வர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் ஆகும். இதில் நடுநிலைமை என கூறி தலைமறைவாக முடியாது. நடுநிலைமை என்பதும் கள்வர் கூட்டத்தை ஆதரிப்பதே ஆகும். இன்று முழு நாடும் போராட்டக் களமாக மாறியிருக்கின்றது. நாளுக்கு நாள் பொருளாதாரம் மீளக் கட்டியெழுப்ப முடியாத அதலபாதாளத்துக்குச் சென்று கொண்டிருக்கிறது. இவற்றுக்கு உடனடித் தீர்வு அவசியம்.
நாடாளுமன்றத்தில் உள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆத ரிக்கக் கடமைப்பட்டுள்ளனர். இதனை எதிர்ப்பது என்பது நாட்டை புறம்தள்ளி, மக்களை புறம்தள்ளி, இன்று வீதியில் இறங்கி போராடும் இளைஞர் யுவதிகளின் கருத்தை, கோஷத்தை ஏளனப்படுத்தித் தமது சொந்த நலனுக்காகச் செயற்படுவதாகும் - என்றார். (ம)

# பிரியந்த கொலை; 6 பேருக்கு தூக்கு

லாகூர், ஏப். 20
பாகிஸ்தானில் கொடூரமாக படுகொலை செய்து எரிக்கப்பட்ட இலங்கைப் பிரஜையான பிரியந்த குமாரவின் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 6 பேருக்குத் தூக்குத் தண்டனையும், 7 பேருக்கு ஆயுள் தண்டனையும், 76 பேருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது. (ஒ-இ)

நாளை 21.04.2022 வியாழக்கிழமை சித்திரை 08
சுபநேரம்: 07.31 - 09.01
ராகுகாலம்: 01.31 - 03.01

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கு உக்ரைனில் ரஷ்யா குண்டுமழை!

## உலக நாடுகள் உதவ வேண்டுமென உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கி அழைப்பு

**கீவ், ஏப். 20**

**உக்ரைனில் நேற்று 56ஆவது நாளாக ரஷ்யா தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. கிழக்கு உக்ரைனைக் கைப்பற்றும் நடவடிக்கையில் ரஷ்யப் படைகள் மூர்க்கமாக இறங்கியுள்ளன. கிழக்கு உக்ரைனில் ரஷ்யப் படைகள் முன்னேறி வருவதாகவும் உலக நாடுகள் உதவிக்கு வரவேண்டும் என்றும் உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.**



முன்னதாக தலைநகர் கீவ், மரியுபோல் உள்ளிட்ட பகுதிகளில் கடும் தாக்குதல்களை நடத்திய ரஷ்யப் படைகள் தற்போது கிழக்கு உக்ரைனில் தீவிரமாக முன்னேறி வருகின்றன. கிழக்கு உக்ரைனின் டொன்பொஸ் பிராந்தியம் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. உக்ரைனுக்குக் கீழ் இருப்பதை அந்தப் பகுதி மக்கள் விரும்பவில்லை. இந்த நிலையில் டொன்பொஸில் இருந்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது ரஷ்யா. உக்ரைனை இரண்டாகப் பிரித்து கிழக்கு உக்ரைனைக் கைப்பற்றி அதைத் தனிநாடு என்று அறிவிக்கும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டு வருகின்றதா என்ற சந்தேகம் வலுவாக ஏற்பட்டுள்ளது. உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கும் முன்னர், டொன்பொஸை தனிநாடு என்று ரஷ்யா அறிவித்து உக்ரைனில் உள்ள ரஷ்ய மொழி பேசுகின்றவர்களை அந்தப் பகுதிக்குள் நுழையுமாறு கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

---

### கிழக்கு உக்ரைனில் உள்ள


## கிரெமின்னா நகரத்தை கைப்பற்றியது ரஷ்யா!

கீவ், ஏப். 20

கிழக்கு உக்ரைனைக் கைப்பற்றும் இராணுவ அறிவிப்பை வெளியிட்டு 24 மணிநேரத்தில் அந்தப் பகுதியில் உள்ள இரு நகரங்களை ரஷ்யா முழுவதுமாகக் கைப்பற்றியுள்ளது. அதில் எண்ணெய் வளம் அதிகம் உள்ள கிரெமின்னாவும் ஒன்றாகும்.

கிழக்கு உக்ரைனை தன் பிடிக்குள் கொண்டுவருவதற்கு ரஷ்யப் படைகள் கடும் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளன. கிரிமியக் குடா போன்று மற்றொரு இயற்கை வளம் நிறைந்த பகுதியான கிரெமின்னாவை ரஷ்யப் படைகள் நேற்று முன்னிரவு கைப்பற்றின. கிழக்கு உக்ரைனில் இருந்து உக்ரைன் படைகள் பின்வாங்கியதை அடுத்து ரஷ்யப் படைகள் துரிதமாக முன்னேறி வருகின்றன. (ம)





### உக்ரைனின் கோட்டையான

## லிவிவ் நகரும் தாக்கப்பட்டது!

கீவ், ஏப். 20

ரஷ்யாவின் தாக்குதலுக்கு அகப்பட வாய்ப்பில்லை என்று கருதப்பட்ட உக்ரைனின் லிவிவ் நகரையும் ரஷ்யப் படைகள் தாக்கத் தொடங்கியிருக்கின்றன.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையில் உக்ரைனின் மேற்குப் பகுதிகள் ஆபத்துக் குறைந்தவையாகக் கருதப்பட்டன. அதிலும் லிவிவ் நகரம் ரஷ்யப் படைகளால் தாக்கப்பட வாய்ப்பில்லாத நகரம் என்று கருதப்பட்டது. இவ்வாறிருக்கையில், லிவிவ் நகரையும் இலக்குவைத்து தாக்கத் தொடங்கியிருக்கின்றன ரஷ்யப் படைகள். நான்கு ஏவுகணைகள் லிவிவ் நகரை நேற்று அதிகாலை தாக்கியுள்ளன. (ம)



## இந்தோனேசியாவில் நேற்று நிலநடுக்கம்!

யகார்த்தா, ஏப். 20

இந்தோனேசியாவில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் லைவசி தீவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவு கோலில் 6 அலகுகளாக நிலநடுக்கம் பதிவானது. எனினும் உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. (ம)

---

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** யாரைப்பற்றியும் குறைகூற வேண்டாம். அதுவே நல்லது. பிறரது நலனுக்காக கூடுதல் பணி செய்வதால் பாராட்டுப் பெறுவீர்கள். கடந்த காலத்தவறுகளைத் திருத்திக் கொண்டு பயனடைவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தினர் உங்களால் பெருமிதம் அடைவார்கள். பொறுப்புடன் பணியாற்றுவீர்கள். உறவினர் வருகையுண்டு. பக்கத்து வீட்டாரிடம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருங்கள்.

**மிதுனம்:** நண்பர்களிடம் சில பிரச்சினைகளை மனம்விட்டுப் பேசுவீர்கள். உறவினர், நண்பர்கள் உங்களின் வீடு தேடி வருவார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு எதிர்பாராத நன்மை ஏற்படும்.

**கடகம்:** உங்களை விட்டு பிரிந்த நண்பர்களிடம் சமாதானம் செய்வீர்கள். பொறுமையால் கூடுதல் நன்மை கிடைக்கும் நாள். இத்தனை நாளாக சிரமாகத் தெரிந்த ஒரு செயல் இனிமேல் சுலபமாகும்.

**சிம்மம்:** குடும்பத்தில் ஒருவரின் ஆரோக்கியம் மேம்படும். நிம்மதியான நாள். குழந்தைகளால் பெருமை சேரும் நாள். பக்கத்து வீட்டாரிடமுள்ள எதிர்ப்பு அடங்கி சமாதானமாகும் நாள்.

**கன்னி:** பணியிடத்தில் சாதுர்யமாக செயற்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். பழைய கடனை தீர்க்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கும்.

**துலாம்:** பணியாளர்களுக்கு மனதில் இருந்த பயம் நீங்கும். நிம்மதி கூடும். உங்களுக்கு புது வேலைக்கான நற்செய்தி தேடி வரும். மகிழ்ச்சியான நாள் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கவலை தீரும். மனம் லேசாகும்.

**விருச்சிகம்:** பிறருக்கு உதவி செய்து பெரியோரின் வாழ்த்தைப் பெறுவீர்கள். இன்று முதல் பண விடயத்தில் சிக்கனத்தை கடைப்பிடிப்பீர்கள். விடா முயற்சியால் சில செயல்களை சிறப்புடன் முடிப்பீர்கள்.

**தனுசு:** வியாபாரத்தில் இலாபம் ஈட்டுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. வீட்டில் செலவுகளைக் குறைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். கடுமையாக தொல்லை தந்தவர்கள் உங்களை விட்டு விலகும் நாள்.

**மகரம்:** இன்று வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும். எதிர்கால திட்டம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். இயற்கை உணவுகளை எடுத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்:** சமூகத்தில் உங்களின் மதிப்பும், மரியாதையும் உயரும். இப்போது நீங்கள் எடுக்கும் முடிவுகள் எதிர்காலத்தில் நன்மையைத் தரும். உடலுக்கு ஒவ்வாத உணவுகளை சாப்பிடவேண்டாம்.

**மீனம்:** குழந்தைகளால் பெருமிதம் அடைவீர்கள். மகிழ்ச்சி கூடும் நாள். அதிர்ஷ்ட வசத்தால் உங்களுக்கு நன்மை ஏற்படும் நாள். உற்சாகமாக சுபச்செலவுகளை செய்வீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை சீர்குலைக்க திட்டமிடப்பட்ட சதி!

## அரசுக்கு ஆதரவான சட்டத்தரணிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20

ஏதேனுமொரு அமைப்பொன்று, திட்டமிட்டு பணத்தைச் செலவிட்டு நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கின்றதா? என்று அரசுக்கு ஆதரவான சட்டத்தரணிகள் சந்தேகம் வெளியிட்டனர். அரசாங்கத்துக்கு ஆதரவான சட்டத்தரணிகளுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாட்டில் இதுவரையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதக நிலைமைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அரசமைப்புக்கு அமைவாக, ஜனாதிபதியை நீக்குவதானது ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவதுபோன்று செய்வதற்கு முடியாததொரு விடயமாகும். அரசமைப்பு தொடர்பில் தெளிவான புரிதல் இன்றி, தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டு ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது போன்று தோன்றுகின்றது. கடந்தகாலம் மற்றும் தற்போதைய சட்டங்களைப் பற்றிய புரிதலின்றி இளைஞர்களை ஈடுபடுத்தி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டத்தை நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது, நாட்டில் மீண்டும் ஒரு பேரழிவை ஏற்படுத்தும் என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. மக்களை ஈடுபடுத்தி வேறு அமைப்புக்கள் முன்னெடுத்துவரும் அரசியல் சதி குறித்து மக்கள் அவதானமாகச் செயற்படவேண்டும் என்று பிரதமர் இதன்போது தெரிவித்தார். (க-இ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்: நிலந்த ஜயவர்த்தன பொறுப்பு

## ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன் தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.20**

**உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் முன்னரே கிடைத்த தகவலுக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக, அந்த காலப்பகுதியில் அரச புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரியாகவும் தற்போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும் செயற்படும் நிலந்த ஜயவர்தன பொறுப்புக்கூற வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஏப்ரல் 4 ஆம் திகதி இந்தியாவிலிருந்து புலனாய்வு அதிகாரிகளால் கிடைத்த தகவல், வெறுமனே தகவல் மாத்திரம் என நிலந்த ஜயவர்தன சாட்சி வழங்கியுள்ளார். அது புலனாய்வுத் தகவல் அல்ல என அவர் சாட்சி வழங்கியுள்ளார்.

எனினும், அந்த தகவல் தொடர்பில் அரச புலனாய்வு பணிப்பாளர் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு ஏப்ரல் 7 ஆம் திகதி கடிதம் ஊடாக அறிவித்துள்ளார்.

அந்த அறிக்கை தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்குமாறு சிசிர மெண்டிஸ் ஏப்ரல் 9 ஆம் திகதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

அந்த கடிதத்துக்கு அமைய, அப்போதைய பொலிஸ் மா அதிபர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஆயினும், சாட்சியம் வழங்கிய நிலந்த ஜயவர்தனவிடம் குறுக்கு கேள்விகளை கேட்ட போது, இந்த விடயம் ஏப்ரல் 20 ஆம் திகதி மாலை 4.20 மணிக்கே புலனாய்வுத் தகவலாக உறுதி செய்யப்பட்டது என்று அவர் கூறி யுள்ளார். எவ்வாறு அப்போது புலனாய்வுத் தகவலாக அது உறுதி செய்யப்பட்டது என நான் வினவினேன். ஏப்ரல் 04 ஆம் திகதி புலனாய்வுத் தகவல் அனுப்பிய அதே நபர் 20 ஆம் திகதியும் வட்ஸ்அப் ஊடாக மீண்டும் தகவல் அனுப்பினார் என்று அவர் கூறினார்.

ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கிடைத்த தகவலை உறுதி செய்ய புலனாய்வு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தார்களா என கேட்டபோது, அதற்கு இல்லை என அவர் பதில் வழங்கினார்.

ஏப்ரல் 09 ஆம் திகதி நடைபெற்ற புலனாய்வு மீளாய்வுக் கூட்டத்தில் ஏன் இந்த விடயத்தை முன்வைக்கவில்லை என குறுக்கிட்டு கேட்டபோது, சிசிர மெண்டிஸிடம் கூறுமாறு தான் கேட்டதாக சாட்சியம் வழங்கப்பட்டது. எனினும், அரச புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரியூடாகவே, புலனாய்வு பிரிவின் அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். அவர் அதனை உரியவாறு செய்யவில்லை.

ஏதேனும் ஒரு வகையில் இந்த விடயத்தை கூறியதன் பின்னர், ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு, அமைதியின்மை ஏற்பட்ட பின்னர் தாக்குதல் நடந்திருக்காவிடின், தான் பணியிலிருந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் சாட்சியம் வழங்கிய போது கூறினார்.

ஒரு அதிகாரியின் தவறான தீர்மானத்தால் நாட்டில் 250 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அன்று நிலந்த ஜயவர்தனவுக்கு கிடைத்த தகவலை புலனாய்வுத் தகவலாக கருதாததாலேயே இந்த பேரழிவு ஏற்பட்டது- என்றார். (எ-இ)

# மீன்பிடி நடவடிக்கைக்கு தடையின்றி எரிபொருள்

கொழும்பு, ஏப். 20

மீன்பிடி நடவடிக்கைகளுக்கு போதுமான எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மீன்பிடித் தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. பல நாள் கப்பல்களுக்குத் தேவையான எரிபொருள் இருப்புக்களை எந்தவித தடையுமின்றி வழங்குமாறு அனைத்து மீன்பிடித்துறை முகங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீனவர்களுக்கு எரிபொருள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினை இருப்பின், அமைச்சுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ அறிவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## மோ.சைக்கிள் மோதி இளைஞர் காயம்

சாவகச்சேரி, ஏப். 20

இரு மோட்டார் சைக்கிள்கள் எதிரெதிரே மோதி விபத்துக்குள்ளானதில் 27 வயது இளைஞர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அல்லாரையில் இடம்பெற்றது.

தலைக்கவசம் அணியாமல் பயணித்த வேளையில் விபத்து இடம்பெற்றதால் அவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ம-14,9)

# புதிய அமைச்சரவையால் பொருளாதாரம் மீளுமாம்

## கனக ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 20

புதிய அமைச்சரவையால் நாட்டின் பொருளாதாரம் மீளக்கட்டியெழுப்பப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்ற அவர் மேலும் தெரிவிக்கையில்;

வரலாற்றில் முதல் முறையாக, நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒரு அரசாங்கமாக நாங்கள் பல பெரும் சவால்களை எதிர்கொள்கின்றோம். அரசாங்கத்தின் முதன்மையான கவனம் நாட்டை முன்னோக்கி வழிநடத்துவது மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை விடுவிப்பதாகும். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உழைக்கவேண்டும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது, புதிய உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது மற்றும் ஏற்றுமதி செயல்முறையை வலுப்படுத்துவது புதிய அமைச்சரவையின் நோக்கமாகும். எத்தனை சவால்கள் வந்தாலும் வளர்ச்சியையும், முதலீட்டையும் கைவிடமுடியாது. எனவே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார். (க-இ)

# மக்களின் பிரச்சினைகள் நீடித்தால் பெரும் நெருக்கடிகளைச் சந்திப்பீர்!

## அரசியல் கட்சிகளுக்கு அறிவுரை

கொழும்பு,ஏப்.20

மக்களின் தற்போதைய பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்காவிடில், பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என்று அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

சகல கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் தமக்கிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.

அரசியல் மற்றும் பொருளாதாரத் திட்டங்களை உரிய [illegible] துக்குள் செயற்படுத்துவது, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தவிர்க்கமுடியாத பொறுப்பாகும். மக்களின் கருத்துக்களுக்கு இப்போது செவிசாய்க்காவிடில், பின்னால் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள்




மங்கலகரமான **'சுபகிருது'** புத்தாண்டு கடந்த 14.04.2022 வியாழக்கிழமை அன்று பிறந்தது. குரு வாரத்தில், குருபகவான் தன் சொந்த வீடான மீனராசியில் இருக்கும் நேரத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு பல்வேறு நன்மைகள் தரப்போகிறது. சுபகிருது என்றாலே நற்செய்கை என்று பொருள். சுபகிருது வருடத்தில் நாடெங்கும் நல்ல மழை பெய்யும் சுபீட்சமாக விளங்கும் என தமிழ் பஞ்சாங்கம் கணித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டு காலமாக நோய்களின் பிடியில் சிக்கித்தவித்த மக்கள் இந்த ஆண்டு நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.



## தனுசு

தன் மனதுக்குச் சரியெனப் பட்டதை யார் தடுத்தாலும் தயங்காமல் செய்பவர்களே! உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் இந்த சுபகிருது வருடம் பிறப்பதால் மற்றவர்கள் செய்ய முடியாத சவாலான காரியங்களையும் சாமர்த்தியமாகச் செய்துமுடிப்பீர்கள்.

அடுக்கடுக்காகச் செலவுகள் வந்தாலும் அதற்கேற்ற வருமானமும் உண்டு. குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும்.

சுக்ரனும், புதனும் சாதகமான வீடுகளில் அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்த புத்தாண்டு பிறப்பதால் எதிர்பார்த்திருந்த தொகை வரும். வெளிநாட்டிலிருப்பவர்கள், வெளி மாநிலத்தில் இருப்பவர்கள் ஆதரவாக இருப்பார்கள். மகிழ்ச்சியான செய்திகள்வரும்.

குரு உங்கள் ராசிக்கு 4 ஆம் வீட்டில் அமர்வதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்டும் பணி தாமதமாகும். தாயாரை தவறாகப் புரிந்துக் கொள்ளாதீர்கள். அவருக்கு குருதி அழுத்தம், செரிமானக் கோளாறு, கை, கால் வலி வந்துப் போகும். பழைய பிரச்சினைகள், சிக்கல்கள் மீண்டும் வந்துவிடுமோ என்றெல்லாம் பயப்படுவீர்கள்.

தாய்வழி உறவினர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். தாய்வழி சொத்தைப் போராடி பெறவேண்டிவரும். மற்றவர்கள் சில ஆலோசனைகள் வழங்கினாலும் அதை அப்படியே ஏற்காமல் யோசித்து சில விஷயங்களில் ஈடுபடுவது நல்லது. சொத்து வாங்கும்போது ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என்று பலமுறை விசாரித்து வாங்குவது நல்லது. நேரம் தவறி சாப்பிடுவதை தவிர்க்கப் பாருங்கள்.

இந்தாண்டு முழுக்க சனி 2இல் அமர்ந்து ஏழரைச்சனியின் ஒருபகுதியான பாதச் சனியாக இருப்பதால் குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். பிள்ளைகளை ஆரம்பத்திலிருந்தே இன்னும் கொஞ்சம் கண்டித்து வளர்த்திருக்கலாமென இப்போது நினைப்பீர்கள். அவர்களின் முரட்டுத்தனத்தை அன்பால் மாற்றுங்கள்.

கேது லாப வீட்டுக்குள் வருவதால் திடீர் யோகம் உண்டு. மூத்த சகோதரர்கள் பாசமாக இருப்பார்கள். சொத்துச் சிக்கல்கள் பேச்சு மூலம் சரியாகும். ஆனால் ராகு 5ஆம் வீட்டுக்குள் வருவதால் பிள்ளைகளால் வீண் அலைச்சலும், மன உளைச்சலும் வரக்கூடும். அவர்களின் நட்பு வட்டத்தைக் கண்காணியுங்கள். சொந்தம் பந்தங்களுடன் மோதல் போக்கு ஏற்படும். குடியிருக்கும் வீட்டை மாற்ற வேண்டி வரும். சிலர் நகரத்திலிருந்து விலகி சற்றே ஒதுக்குப்புறமான பகுதிகளுக்குக் குடிபெயர்வீர்கள். அவ்வப்போது பழுதான வாகனத்தை மாற்றி புதிய வாகனத்தை வாங்குவீர்கள்.

18.06.2022 முதல் 13.07.2022 வரை மற்றும் 07.04.2023 முதல் 13.04.2023 வரை சுக்ரன் 6இல் மறைவதால் பேச்சால் பிரச்சினைகளும் வரக்கூடும். மற்றவர்கள் வீட்டு விஷயங்களில் நீங்கள் தலையிடாமல் இருப்பது நல்லது.

**வியாபாரிகளுக்கு...**

வைகாசி, புரட்டாசி மாதங்களில் சொந்த இடத்தில் கடையை மாற்ற முயற்சி செய்வீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கும். ஐப்பசி, மாசி, பங்குனி மாதங்களில் புது ஒப்பந்தங்கள் தேடிவரும். வேலையாள்கள் பொறுப் புணர்ந்து நடந்துகொள்வார்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு...**

இனி உங்களின் செல்வாக்கு உயரும். உயர் அதிகாரிகள் வெளிப்படையாகவே உதவுவார்கள். உங்களின் நெடுநாள் கனவான சம்பள உயர்வு, பதவியுயர்வு வைகாசி, ஆவணி மாதங்களில் உண்டு. ஐப்பசி, மாசி மாதங்களில் வேறு நல்ல வாய்ப்புகள் வரும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு. அரச பணியாளர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள். வேலையைத் தேக்கி வைக்காமல் அவ்வப்போது முடிக்கப் பாருங்கள். கணினி துறையினருக்கு வெளிநாட்டில் நல்ல சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கும்.

**இந்தப் புத்தாண்டு விரக்தியாக இருந்த உங்களை வெற்றிக் கனியை சுவைக்க வைப்பதுடன் அடுத்தடுத்து வளர்ச்சியையும் தருவதாக அமையும்.**

## குருப்பெயர்ச்சி பலன்கள்

**சுபகிரகமான அதிசார குரு பெயர்ச்சி கடந்த 14ஆம் திகதி கும்பத்திலிருந்து மீன ராசிக்கு நிகழ்ந்தது. இந்தப் பெயர்ச்சியால் ஏற்படும் பலன்கள் 12 ராசிகளுக்குப் பார்ப்போம்.**




எல்லோருடனும் நட்பு கொண்டு அனைவரையும் உங்கள் பக்கம் ஈர்க்கும் திறமைசாலிகளான தனுசு ராசி அன்பர்களே! தற்போது குருபகவான் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் வந்து அமரவுள்ளார். ஆகவே. 14.04.22 முதல் 22.04.23 வரை வேலைச் சுமை அதிகரிக்கும். குடும்பத்தில் சிறு சிறு சச்சரவுகள் வரும். வீண் சந்தேகத்தால் கணவன்-மனைவி பிரிய வேண்டிவரும். ஆகவே, எதிலும் உணர்ச்சிவசப்படாமல் அறிவுபூர்வமாக முடிவெடுக்கப்பாருங்கள்.

இயன்றவரையிலும் நெடுந்தூர. இரவுநேரப் பயணங்களைத் தவிர்க்கப்பாருங்கள். வாகன விபத்துக்கள் நிகழக்கூடும். தாயாரின் உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். மற்றவர்கள் விடயத்தில் அத்துமீறி மூக்கை நுழைக்கவேண்டாம். வீண் விவாதங்கள் வருவதற்கு வாய்ப்பு உண்டு. மின்சார சாதனங்கள், நெருப்பு சம்பந்தப்பட்ட வேலைகளில் கவனமுடன் செயற்படுங்கள்.

குருபகவான் உங்கள் சுக ஸ்தானத்தில் ஆட்சிப்பெற்று அமர்வதால். அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. பணத்தட்டுபாடு ஓரளவு குறையும். பூர்வீகச் சொத்துப் பிரச்னையில் சிக்கிக்கொள்ளவேண்டாம். பிள்ளைகளின் கல்யாண விடயத்தில் அவசரப்பட வேண்டாம். உயர்கல்வி உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிவார்கள்.

எந்தச் சிக்கலாக இருந்தாலும் பெரியவர்களை வைத்துப் பேசி சுமுகமாக முடிக்கப்பாருங்கள். வெளிவட்டாரத்தில் எவரையும் விமர்சித்துப் பேசவேண்டாம். சில நேரங்களில் உங்களின் கோபதாபங்களை, கூடாபழக்க வழக்கங்களை வாழ்க்கைத் துணைவர் சுட்டிக்காட்டினால், தயங்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள். வெளி உணவுகளையும் எண்ணெய்ப் பதார்த்தங்களையும் தவிர்த்துவிடுங்கள். புதிய சொத்துகள் வாங்கும்போது ஆவணங்களையும் தாய்ப் பத்திரத்தையும் அலசி ஆராய்ந்து முடிவெடுங்கள். பெரும்பாலும் வீண் விமர்சனங்களைத் தவிர்த்துவிடுங்கள்.

**14.04.22 முதல் 29.04.22 வரை**

குருபகவான் பூரட்டாதி 4ஆம் பாதத்தில் செல்கிறார். திடீர்ப் பயணங்கள், தாயாரின் உடல்நிலை பாதிப்பு, வீடு வாகனப் பாராமரிப்புச் செலவுகள் அதிகரித்தல். எதிலும் ஒரு நாட்டமில்லாத நிலை ஆகியவை வந்து நீங்கும்.

**30.04.2022 முதல் 24.02.2023 வரை**

சனி பகவானின் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்கிறார். முன்கோபம், வாக்குவாதம் வந்து நீங்கும். தோலில் ஒவ்வாமை வரக்கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். 08.08.2022 முதல் 16.11.2022 வரை உத்திரட்டாதி நட்சத்திரத்திலேயே குருவக்ரத்தில் செல்வதால், கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தைத் தந்து முடிப்பீர்கள். சிலர் வீடு மாற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாவீர்கள்.

**24.02.2023 முதல் 22.04.2023 வரை**

குருபகவான் புதனின் ரேவதி நட்சத்திரத்தில் செல்வதால், பிரிந்தவர்கள் ஒன்று சேர்வீர்கள். வாழ்க்கைத் துணைவர் வழி உறவினர்கள் உதவுவார்கள். சிலருக்குப் புதுவேலை கிடைக்கும்.

**உத்தியோகத்தில்**

வேலை அதிகரிக்கும். சிற்சில தருணங்களில் மற்றவர் வேலைகளையும் நீங்கள் செய்யவேண்டிய நிலை உருவாகும். அதிகாரிகளிடம் வீண்வாக்குவாதம் வேண்டாம். எவ்வளவு பணிகள் என்றாலும் அன்றாடம் முடித்துவிடுங்கள். அதேபோல் சிறு கவனக் குறைவும் பாதிப்புக்களை உண்டுபண்ணும் என்பதால் அலட்சியத்தைத் தவிருங்கள்.

**மொத்தத்தில் இந்தக் குருப்பெயர்ச்சி, வருங்காலத்தில் சாதிப்பதற்கு ஏற்ப தயார்படுத்துவதாக அமையும்.**



## வீடு மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 20

அயலவருடன் ஏற்பட்ட முரண்பாட்டில் வீடொன்றின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் கேற் என்பன அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் சண்டிலிப்பாய்- கல்வளை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இ[illegible] பாய் பொலிஸார் [illegible] முன்னெடுத்துள்ளனர். (க-125,27)

## 'உள்ளம்' சஞ்சிகை அறிமுக விழா

வவுனியா.ஏப்.20

'உள்ளம்' காலாண்டு சஞ்சிகையின் அறிமுகவிழா, வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன் நூலை அறிமுகம் செய்ய, ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் விஜேந்திரன் தம்பதியர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டனர். [illegible] நயவுரையை [illegible] இலக்கியச் செயற்பாட்டாளர்கள் நிகழ்த்தினர். வளர்ந்து வரும் 15 கலைஞர்கள் இணைந்து நிகழ்வைத் தொகுத்து வழங்கினர். (க-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாட்டால்

# நாட்டில் சுகாதாரத்துறை அடுத்தவாரம் முடங்கும்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஏப். 20**

**தொடர்ச்சியான மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, சுகாதாரத்துறை அடுத்த வாரத்துக்குள் முடங்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தினர் மேலும் தெரிவிக்கையில்;
சுகாதாரத்துறை அத்தியாவசிய சேவையாக இருப்பதால் அதனைத் தொடர்ந்து இயங்குவதற்கு அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் அவசர நேரத்தில் மருத்துவமனைகளுக்குச் செல்ல முடியாதுள்ளனர். எரிபொருள் தட்டுப்பாடு சுகாதாரத்துறையில் பணியாற்றும் ஊழியர்களையும் பாதித்துள்ளது.
துப்புரவுப் பணியாளர்கள் முதல் துணை சேவை வழங்குநர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவர்கள் வரை ஒவ்வொரு பணியாளரும் வேலைக்குச் செல்வதற்கு சிரமப்படுகின்றனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கிடைக்காததன் காரணமாக பலர் குறித்த நேரத்தில் பணிக்குச் சமுகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அத்தியாவசிய சேவை வழங்குநர்கள், பொதுமக்களுக்கான சேவையை முன்னெடுத்துச் செல்வதற்காக மிக விரைவாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறையை அறிமுகப்படுத்தவேண்டும். இல்லாவிட்டால், சுகாதாரத்துறைக்கு விசேட போக்குவரத்து முறையை அறிமுகப்படுத்த வேண்டும் - என்றனர். (க-இ)

## நாட்டின் மக்கள் 10 இலட்சம் ரூபா கடனாளிகள்



கொழும்பு, ஏப்.20
நாட்டின் அனைத்து குடிமக்களும் தலா 10 லட்சம் ரூபா கடனாளிகள் என முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
2017 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகமாக நான்அறிக்கை வெளியிடும்போது தனிநபர் கடனானது 5 லட்சத்து 24 ஆயிரம் ரூபாவாக இருந்தது. வரவு - செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகையை ஈடுசெய்யவே அதிகளவில் கடன் பெறப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் மொத்தக் கடன் 20 ட்ரில்லியன் ரூபாவரை அதிகரித்துள்ளது. நாடு இந்த இடத்துக்குத் தள்ளப்பட பிரதான காரணம். 2015 ஆம் ஆண்டு நடந்த மத்திய வங்கியின் கொள்ளை, சர்வதேச நாணய நிதியம் வழங்கும் கடனில் ஒரு டொலருக்கும் அரசு பொறுப்புக்கூற வேண்டும். அந்தப் பணம் நியாயமான முறையில் செலவிடப்பட வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், சர்வதேச நாணய நிதியம் எந்தவிதக் கடன்களையோ நிதியுதவிகளையோ வழங்காது -என்றார். (எ-இ)

## வீதி விபத்தில் இருவர் பலி!



கொழும்பு ஏப்.20
புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி செம்பட்டை பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
மதுரங்குளி வேல்சிமனபுர பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபரும், மதுரங்குளி வீரபுர பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபருமே உயிரிழந்தவர்கள். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ய)



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடி நீங்க, கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பு வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. சுயாதீன திருச்சபைகள் ஒன்றிணைந்து குறித்த வழிபாட்டை முன்னெடுத்தன. (ம-113)

## தடம்புரண்டது ரயில்!

கொழும்பு, ஏப். 20
பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணம் மேற் கொண்ட ரயிலொன்று பதுளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தடம்புரண்டது. குறித்த ரயிலில் அதிகளவானோர் பயணித்த நிலையில் அவர்களை மீண்டும் பதுளை ரயில் நிலையத்துக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)

## இலாபத்தை பதிவுசெய்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்!

கொழும்பு, ஏப். 20
சிறீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம், 2022ஆம் ஆண்டு மார்ச் 31இல் முடிவடைந்த நிதியாண்டில் 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் குழு நிகர இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது. (ய)

## வீட்டு மயில் ஆலயத்தில் சேர்ப்பிப்பு!

கிளிநொச்சி, ஏப். 20
மட்டுவில் பனையடிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள வீடொன்றில் வளர்க்கப்பட்ட மயில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் உத்தரவுக்கமைய ஆலயத்தில் சேர்க்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய அதிகாரிகள் உரிய இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். வீட்டின் உரிமையாளருக்கு எச்சரிக்கை விடுத்து மயிலை ஆலயத்தில் சேர்த்தனர். (ம-14,131)

## பொலிஸாரின் கண்காணிப்பால் எரிபொருள்கள் விநியோகம் சீர்

கிளிநொச்சி, ஏப். 20
பொலிஸாரின் கண்காணிப்பை அடுத்து, எரிபொருள் விநியோகம் சீராக இடம்பெற்று வருகின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
போத்தல்கள் மற்றும் கான்களில் பெற்றோல், டீசல் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதனால், நுகர்வை மீறிய எரிபொருள் கொள்வனவும் சட்டவிரோதச் சேமிப்பும் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, எம்மால் எரிபொருளைக் கொள்வனவு செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது - என்றனர். (ம-க,113)



## யோகபுரம் மகா வித்திக்கு புதிய அதிபர் நியமனம்

முல்லைத்தீவு,ஏப்.20
துணுக்காய் கல்வி வலயத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரதி அதிபர் தலைமையில் இயங்கிய யோகபுரம் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக த.பிரேமச்சந்திரன் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
பதவியேற்பு நிகழ்வில் துணுக்காய் மாந்தை கிழக்கு கோட்டக்கல்விப்பணிப்பாளர் த.யோகானந்தராசா, அயற்பாடசாலை அதிபர்கள், மல்லாவி லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் இ.சுரேஸ்குமார், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் செந்தூரன் மற்றும் பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-19)

## இயற்கையுடன் இசைந்த கற்றல் மாணவர்களை வளப்படுத்தும்

### அதிபர் இளங்கோவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 20
மாணவர்கள் சுயமாக, இயற்கையோடுஇசைந்து கற்று, அனுபவங்களைப் பெறவேண்டும் என்று மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய அதிபர் க.இளங்கோவன் தெரிவித்தார். மீசாலை வளாகத்தில் அமைந்துள்ள கயல்விழி அறிவொளி முன்பள்ளித் திறப்பு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 710 முன்பள்ளிகள் உள்ளன. கிட்டத்தட்ட ஆயிரத்து 300 ஆசிரியர்கள் கடமையாற்றி வருகின்றனர். இந்த முன்பள்ளிக் கல்வியின் நோக்கங்கள் ஏன் நிறைவேற்றப்படவில்லை? இதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராய வேண்டும். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு மிகக் குறைவாக இருப்பதும் காரணமாக இருக்கலாம். மாணவர்கள் இயற்கையோடு ஒன்றாகச் சேர்ந்து, அதனோடு தொட்டுணர்ந்து அனுபவங்களினூடாக கற்க வேண்டும். கற்றலை விளையாட்டாகவும், விளையாட்டைக் கற்றலாகவும் ஏற்படுத்தக்கூடிய சூழலை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும் -என்றார். (க-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் மோதி சிப்பாய் சாவு

சாவகச்சேரி, ஏப்.20

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் நேற்று நடந்த ரயில் விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சங்கத்தானை ரயில் நிலையத்தில் கடமையில் இருந்த படுள்யு. எம்.எஸ். சமன்குமார (வயது-37) என்ற இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

இவர் ரயில் தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் உடல் தற்போது சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சாவகச்சேரிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-9-131-159)

# நெருக்கடியை ஏற்படுத்தியோர் ஆட்சியில் தொடரமுடியாது!

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



**கொழும்பு, ஏப். 20**

**நாட்டு மக்களை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ள இந்த அரசாங்கத்தை மக்கள் இனியும் நம்பத் தயாரில்லை. எனவே மக்கள் எதிர்பார்க்கும் புதிய ஆட்சி கட்டியெழுப்பப்படவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை இயல்பாக ஏற்பட்டதொன்றல்ல. அது ஆட்சி யாளர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

இரசாயன உரத்துக்கு தடை விதிக்கும்போது, அந்த முடிவை மாற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினோம். விவசாயிகள் வீதியில் இறங்கிப் போராடினர். அதற்கும் அரசியல் முத்திரை குத்தப்பட்டது. ஆனால் இன்று, இரசாயன உரம் தொடர்பில் தான் எடுத்த முடிவு தவறு என்பதை ஜனாதிபதி ஒப்புக்கொண்டுள்ளார். நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படவும், விவசாய நிலங்கள் அழிவதற்கும், விவசாயிகள் தெருவுக்கு வருவதற்கும் ஜனாதிபதியின் முடிவே காரணம். இப்படியான ஜனாதிபதி பதவியில் இருக்கக் கூடாது.

பணம் அச்சிடுவது பற்றிக் கேள்வி எழுப்பினோம். அதன் பாரதூரத்தன்மையைத் தெளிவுபடுத்தினோம். ஆனால் இது தான் நூதன பொருளாதாரம் என்று கப்ரால் விளக்கமளித்தார். பணவீக்கம் ஏற்படாது எனவும் குறிப்பிட்டார். பணம் அச்சிடப்பட்டமையும் பணவீக்கத்துக்குக் காரணம் என்று புதிய மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். எனவே, நாட்டில் இயல்பாக பிரச்சினைகள் ஏற்படவில்லை. அவை உருவாக்கப்பட்டவை.

எனவே, இந்த ஜனாதிபதி, பிரதமர் இருக்கும் ஆட்சிக்கட்டமைப்பில் தீர்வை எதிர்பார்க்கமுடியாது. தேடவும் இயலாது. நாடாளுமன்றில் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் காட்டி, ஆட்சியைத் தக்கவைக்க முற்படலாம். ஆனால் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டனர் - என்றார். (க-44)


**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**(தாய்ச்சங்கம்)**

24.04.2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருந்த வருடாந்த பொதுக் கூட்டமும், நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பும் தவிர்க்க முடியாத காரணத்தினால் 08.05.2022 ஞாயிற்றுக் கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

காலம் :- **08.05.2022 (ஞாயிற்றுக்கிழமை)**
நேரம் :- **வருடாந்த பொதுக்கூட்டம் முற்பகல் 10.00 மணி, நிர்வாக சபைக்கான வாக்கெடுப்பு பிற்பகல் 1.00 மணிமுதல் 4.00 மணிவரை**
இடம் :- **பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்**

பா.செந்தில்குமார் (செயலாளர்) (CR 8290) (4/6)
பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக்கல்லூரி



**ஈர விழிகளுடன் எட்டு ஆண்டு**
**கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்**



தோற்றம் 13.10.1924 மறைவு 19.04.2014

திதி:-
சித்திரை மாத சங்கடாஹர சதுர்த்தி
(20.04.2022)
அன்புத் தெய்வமே
ஆண்டுகள் எட்டு போனது
அம்மா
எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும்
தங்கள் அன்பும்
எம்மை வழி நடத்திச் செல்லும்
தங்களை நேரில் காண
இயலாது
இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே
வாழ்கிறீர்கள்
மகன் குடும்பத்தினர்
இல.140, பரமேஸ்வராச்சந்தி,
திருநெல்வேலி.



**மரண அறிவித்தல்**

**திருமதி**
**இந்திராதேவி நடராசா**

அல்வாய் மேற்கு திக்கத்தைப் பிறப்பிடமாகவும் மணியகாரன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி நடராசா அவர்கள் நேற்று (19.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான கனகசபை - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் இளைய புத்திரியும், அமரர் கந்தையா நடராசாவின் அன்பு மனைவியும், வாசுகி (ஜேர்மனி), தமயந்தி (ஜேர்மனி), நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுந்தரம் (ஜேர்மனி), கலாநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜேர்மனியைச் சேர்ந்த ராகுலன், பிரியங்கா, தீபா, துளசி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சௌந்தராம்பிகை, தணிகாசலம்பிள்ளை, மாங்கையற்கரசி, பாலசுப்பிரமணியம், கதிர்காமத்தம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவபாக்கியம், அமரர்களான தையல்நாயகி, பராசக்தி மற்றும் இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2022) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மணியகாரன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (CS 19422) (4/6) தகவல் குடும்பத்தினர்.


# வீட்டுத் தோட்டத்துக்கு பயன்தரு மரக்கன்றுகள்

சாவகச்சேரி, ஏப். 20

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடவுள்ள பயனாளிகளுக்கு, பயன்தரு மரக்கன்றுகள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

விவசாயத் திணைக்களத்தால், கிராம அலுவலர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தலா 156 பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 6 ஆயிரத்து 300 பயனாளிகளுக்கு அண்மையில் நாற்று மேடைகளில் வளர்க்கப்பட்ட வீட்டுத்தோட்டப் பயிர்கள் வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக மா, கொய்யா, மாதுளை ஆகிய மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (க-9)


**மரண அறிவித்தல்**

**முருகன் நாகராசா**



தோற்றம் 01.03.1951 மறைவு 19.04.2022

யாழ். சுழிபுரம் பச்சந்தையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கு பாண்டவெட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் நாகராசா அவர்கள் நேற்று (19.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2022) புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
(சகோதரர்கள்)
077 104 3178
திரு.நா.இராசேந்திரகுமார் (சந்திரன்)
(தயந்தன் கட்டட ஒப்பந்தகாரர்,
முரளிகிருஷ்ணாஞாபகார்த்த திருநாவுக்கரசு
சனசமூக நிலைய தலைவர்)

(CS 19420) (4/6) பாண்டவெட்டை, சுழிபுரம் கிழக்கு.



**மரண அறிவித்தல்**



அருட்சகோதரி செபமலர்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ். கார்மேல் கன்னியர் இல்லத்தை வதிவிடமாகவும் கொண்ட அப்போஸ்தொலிக்க கார்மேல் சபை அருட்சகோதரி செபமலர் அவர்கள் நேற்று (19.04.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றி இரங்கற்திருப்பலி புனித மரியாள் பேராலயத்தில் இன்று (20.04.2022) புதன்கிழமை பிற்பகல் 04.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 19421) (4/6) தகவல் Rev.Sr.M.Bemice


# கொடுப்பனவு வழங்கல்

சாவகச்சேரி, ஏப். 20

தென்மராட்சிப் பிரதேச முதியவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் பிரதேச சமூக சேவைகள் அலகால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொடுப்பனவை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளை 21ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி தேவை

தாவடியில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த Hevey Vehicle சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள சாரதி தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப் படும். (CS 19415) (4/6)

T.P - 076 096 9731

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அராலி வீதியில் 65 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (25 இலட்சம் ஒரு பரப்பு) (cs 19057) (2.6)

076 195 6406

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பல் பொருள் வர்த்தக நிலையத்திற்கு வேலை யாட்கள் தேவை. (CS 19419) (4/6)

077 116 5752

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள் தேவை. (ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வோர் விரும்பத்தக்கது) (CS 19418) (4/6)

தொடர்புக்கு:- 077 777 0969

## வேலையாள்கள் தேவை

யாழில் இயங்கும் பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்திற்கு தேவை.

- சிட்டை எழுதுனர்
- கணினி பதிவாளர்
- களஞ்சிய பொறுப்பாளர்
- உதவியாள்கள் உடன் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

(cs.19409) (2.6)

076 009 4946

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 04 . 1950



ஆண்டவன் அடியில் 30 . 04 . 2021

## திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி

(தையல் பயிற்சி ஆசிரியை)

ஆண்டொன்று ஓடி மறைந்ததுவே
அம்மாவின் திருமுகம் மறைந்து
தவம் இருந்து எனைப் பெற்று
கண்ணின் இமைபோல் காத்து
வளர்த்து கலங்கிடாமல் கல்வி தந்து
எனது புன்னகைக்காய் நீங்கள்
செய்த தியாகங்கள் அறிவேன் அம்மா

காலன் - அவன் செய்த சதியால்
இளமையிலே அப்பாவும்
எனை விட்டுப் பிரிந்திடவே
ஆலமரமாய் நின்று எனைத் தாங்கி
சோதனையும் வேதனையும் பட்டீர்கள் - அம்மா
பாசத்தின் திருவுருவே அம்மாவே
அறவாழ்வு வாழ்ந்து அரும்பணிகள்
பல புரிந்து உறவோடு சேர்ந்திருந்து
உன்னதமாய் வாழ்ந்தீர்கள் - அம்மா

மருமகளை தூரதேசம் அனுப்பி
அகமகிழ்ந்து வாழ்கையிலே
பொல்லாத நோய் வந்து - அம்மா
உங்கள் மடிமீது எனைவிட்டுப்பிரிந்ததுவே
என் செய்வேன் அம்மா
உடன் பிறப்பும் மைத்துனிகளும்
கதறி அழ காணாமல் போனீர்கள் - அம்மா

எங்கள் உள்ளக்கோயிலிலே
நாம் உள்ளவரை தெய்வமாய்
அம்மாவின் நினைவு வாழ்ந்திருக்கும்
நயினைத் தாயின் பாதக் கமலத்தில்
வாழ்ந்திருந்து நல்லருளைத் தாருங்கள் - அம்மா
சாந்தி பெறுகவென பிடாரி அம்பாளை
வேண்டி நிற்கின்றோம் சாந்தி

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எங்கள் தாயின் பிரிவின் போது தேடி வந்து துயர் பகிர்ந்தும் பல்வேறு வழி களில் உதவி செய்தும் ஆறுதல் தந்து அரவணைத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரேசன் றோட்
கோண்டாவில் (CS 19412) (3/6)

குடும்பத்தினர்

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அண்மையில் நாள் வாடகைக்கு அறை உண்டு.

076 005 7705

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 10 . 1949



உதிர்வு 30 . 04 . 2021

திருமதி

## யோகரஞ்சிதம் இராஜரட்ணம்

பருத்தித்துறை, புலோலி கிழக்கு, ஞானசம்பந்தர் கலை மன்றத்தின் வளர்ச்சிக்காக 50 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி மறைந்த மன்றத்தின் திட்ட இணைப்பாளர் திருமதி யோகரஞ்சிதம் இராஜரட்ணம் (கிளி அக்கா) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் அவரை பேரன்புடன் நினைவு கூருகின்றோம். உம் வழி தொடர்ந்து கலை மன்றத்தை மேலும் வளர்ச் சியடையச் செய்வோம்.

நிர்வாகம்
ஞானசம்பந்தர் கலைமன்றம் (CS 19390) (3/6)

# கழகங்களுக்கிடையே போட்டிகள் ஆரம்பம்!

சாவகச்சேரி, ஏப். 20

தென்மராட்சிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த வருட விளை யாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளன.

இதற்கமைய ஆண், பெண் பிரிவுகளுக்கு இடையிலான கரப் பந்தாட்டப் போட்டி கள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும், ஆண், பெண் பிரிவு களுக்கான கபடிப் போட்டிகள், பெண்க ளுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி கள் ஆகியன 24 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை9 மணிக்கு சாவகச் சேரி டிறிபேர்க் கல் லூரி மைதானத்தி லும் இடம்பெறவுள் ளன. (ம-14,9)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 - 05 - 1961



மறைவு 18 - 04 - 2022

## சின்னையா சுந்தரலிங்கம்

(முன்னாள் உத்தியோகத்தர்- சாவகச்சேரி பிரதேசசபை)

மந்துவில் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் பெரிய அரசடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுந்தரலிங்கம் நேற்றுமுன்தினம் (18.04.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா பூமணி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், அமரர் கணேசன் இராசபூபதி தம்பதியின் அன்பு மருமகனும், இராஜஜீவியின் (மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய ஆசிரியை) அன்புக் கணவரும், குகரதன் (தொழில்நுட்பவியல் நிறுவகம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), பிரியந்தி (விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) குகபரன் (2021 A/L), குகபவன் (2021 O/L) யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்) அவரின் அன்புச் சகோதரனும், பார்த்திபன் (கணிய அளவையியலாளர்), பரந்தாமன் (விரிவுரையாளர், திருகோணமலை பல்கலைக்கழகம்), பகீரதன் (வைத்தியர்.யாழ்.போதனா வைத்தியசாலை), தனுஷிகா (பிரயோக விஞ்ஞானம், வவுனியா பல்கலைக்கழகம்), பிறிண்ஷிகா (2021 A/L, யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் சித்தப்பாவும், சந்திரசேகரம் (சகலன்-பிரான்ஸ்), இரஞ்சினி (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராச இரஞ்சிதம் (யாழ்.மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாமப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 127 5224, 077 699 8105

பெரிய அரசடி, சங்கத்தானை,
சாவகச்சேரி. (CR 8289) (4/6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"Ammanai Saran Adainthal Athika Varamperalam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

5 Chapel Road, London W13 9AE. Phone:0208 810 0835

Founded:10-08-1991 Charity No:1014409

www.ammanealing.org Email:info@ammanealing.org






எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன. தங்கள் பற்றிய முழு விபரங்களுடன் மேல் உள்ள மின்அஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். REF:SKTAT/05/22

**பணிநிலை 1 மகோற்சவ சிவாச்சாரியார் (Hindu religious workers with non-pastoral role)**

**தகமைகள்:** விண்ணப்பதாரி மகோற்சவ குருவாக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருக்க வேண்டும்.

**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் மகோற்சவ பூசைகள் செய்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிட்டு வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி: 15-05-2022 [ 15 May 2022 ]

**பணிநிலை 2 நாதஸ்வர தவில் கலைஞர்கள் (Hindu religious (Musicians) workers)**

**தகமைகள்:** நாதஸ்வர தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்தில் இருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்

**கடமைகள்:** ஆலய பூசைகாலங்களில் மங்கள இசை இசைத்தல்

**வேதனம்:** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி: 15-05-2022 [ 15 May 2022 ]

# அந்தியேட்டி கிரியை அழைப்பு



மண்ணில் 12.05.1939 விண்ணில் 14.03.2022

கடந்த (14.03.2022) அன்று இறைபதமடைந்த

## அமரர் பாலர் கந்தசாமி

(ஓய்வுபெற்ற கட்டட வரைவாளர் - யாழ்.கட்டட திணைக்களம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.04.2022)வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் கரணவாய் தெற்கு, மணியகாரன் தோட்டத்தில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய கிரியைகளைத் தொடர்ந்து செல்வச்சந்நிதி முருகன் ஆலய தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். இந்த அறிவித்தலை பிரத்தியேக அழைப்பாகக் கருதி தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

**முகவரி:**
**மணியகாரன் தோட்டம்,**
**கரணவாய் தெற்கு,**
**கரவெட்டி.**

**சகோதரர்கள்**
**+ 94 7716 79741**

(cr.37873) (2.6)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



## சண்முகம் லிங்கநாதன் (சின்னத்தம்பி)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் லிங்கநாதன் (சின்னத்தம்பி) நேற்று (19.04.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - இராஜபுஸ்பம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், நிர்மலாதேவி, கமலநாதன், சசிகலாதேவி, ஜெகநாதன் (ஜெயா), தயாநிதி, மனோரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (அருள்), தனபாலசிங்கம் (சுப்பர்) மற்றும் தையல்நாயகி, ரஞ்சிதகுமார், கார்த்திகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.07, இராமநாதன் வீதி,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 422 2185**
**077 848 4804**

(cs19404)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொதித்தது...

ஜனாதிபதியும், அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த மாதத்தின் இறுதியில் இருந்து நாடு முழுவதும் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கொழும்பு, காலி முகத்திடலில் கடந்த 10 நாள்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான மக்கள் கூடித் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பதவியில் இருந்து விலக மறுத்துள்ள ஜனாதிபதி கோத்தாபய, நேற்றுமுன்தினம் புதிய அமைச்சரவை ஒன்றைய நியமித்த கையோடு, எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள், கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு மற்றும் விண்ணைத்தொடும் விலைவாசி உயர்வு என்பவற்றால் கொதிப்படைந்த மக்கள் நேற்று வீதிகளில் ரயர்களை எரித்தும், வீதிகளுக்கு குறுக்கே வாகனங்களை நிறுத்தியும் பெரும் போராட்டங்களை ஆரம்பித்தனர். மக்களின் போராட்டங்களால் பல இடங்களில் போக்குவரத்து தடைப்பட்டது.

**அவிசாவளை**

நேற்றுக்காலை அவிசாவளையில் ஒன்றுகூடிய மக்கள் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவிசாவளை கொழும்பு பிரதான வீதியை மறித்து மக்கள் மேற்கொண்ட போராட்டத்தால் அங்கு பதற்ற நிலைமை காணப்பட்டது.

**ரம்புக்கனை**

எரிபொருள் விலையேற்றத்தைக் கண்டித்தும், அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ரம்புக்கனையில் பெரும் போராட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. வீதிகளில் ரயர்களைக் கொளுத்தி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**அநுராதபுரம்**

அநுராதபுரத்தில் மக்கள் வீதிகளின் குறுக்கே பெக்கோ இயந்திரங்களை நிறுத்திப் போக்குவரத்தைத் துண்டித்துப் போராட்டம் நடத்தினர். அதனால் அங்கு பலமணிநேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

**மாத்தளை**

மாத்தளையில் மக்கள் வீதிகளை மறித்து பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

**மாத்தறை**

மாத்தறையில் பெரும் திரளான மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். எரிபொருள் விலையேற்றத்தால் கொதிப்படைந்த வாகனச் சாரதிகள் பஸ் சேவைகளைப் புறக்கணித்திருந்தனர்.

வீதிகளின் குறுக்கே பஸ்களை நிறுத்தி போக்குவரத்தைத் துண்டித்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

**தெவிநுவர**

தெவிநுவர பிரதேசத்தில், கதிர்காமம் மாத்தறை வீதியை மறித்து மக்கள் ரயர்களை எரித்துப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**பண்டாரவளை**

அப்புத்தளை - வெலிமட - பதுளை வெல்லவாய வீதிகளை மறித்து பண்டாரவளை நகரில் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**தியத்தலாவை**

தியத்தலாவை நகரில் மக்கள் வீதியை மறித்து பெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், அரசாங்கம் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினர்.

**நாடு முழுவதும் போராட்டங்கள்**

அதேநேரம் காலி, இரத்தினபுரி, திகன, மஹியங்கனை, அக்குரஸ்ஸ, சிலாபம், கடுகஸ்தோட்டை, தெல்தெனிய, பாணந்துறை, கேகாலை, ஜிந்தோட்ட, மாதம்பே, மாவனல்ல, தியத்தலாவ, தம்புள்ளை, மஹனுவர, கட்டுநாயக்க ஆகிய இடங்களிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். (அ-எ)

## பொலிஸ்...

படுகாயமடைந்தவர்கள் கேகாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுவரையில் 24 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் கூறுகின்றன. 7 பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வயிற்றுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகக் கோரி மக்கள் நேற்று நாட்டின் பல்வேறு இடங்களிலும் போராட்டம் நடத்தினர். எரிபொருள் மற்றும் கோதுமை மாவின் விலையேற்றங்களும், அதைத் தொடர்ந்து பல பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதும் மக்களைக் கொதிப்படைய வைத்துள்ளன.

ரம்புக்கனையில் ரயில் தண்டவாளத்தை மறித்து நேற்றுமுற்பகல் முதல் மக்கள் போராட்டம் நடத்தினர். அதனால் ரயில் போக்குவரத்துத் தடைப்பட்டது. மக்களின் போராட்டத்தால் வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுப் பிரயோகம் மேற்கொண்டதை அடுத்து அங்கு நிலைமை கட்டுமீறியது. பொலிஸாருக்கும், மக்களுக்கும் முறுகல் நிலைமை ஏற்பட்டதை தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. இந்த முறுகல் நிலைமையில் 8 பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் தரப்பு கூறுகின்றது.

ரம்புக்கனையில் தொடர்ந்தும் பதற்ற நிலைமை நிலவுகின்றது. பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளது. அந்தப் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சிறப்பு அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரும் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ-எ)

## நேற்றைய...

கள் சங்கம் அறிவித்துள்ளது.

உணவகங்களில் மதிய உணவுப் பார்சல் மற்றும் கொத்து ரொட்டியின் விலைகள் 20 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. ஏனைய சிற்றுண்டி வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்படும் என்று அறிவிப்பு.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறையாகும் வகையில் குறைந்த பஸ் கட்டணம் 27 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய பஸ் கட்டணங்கள் 35 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## தீ வைக்க...

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தினர் என்றும் அதில் 8 பொலிஸார் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதேவேளை, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்ததுடன், சுமார் 7 பேர் வரையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று கேகாலை மருத்துவமனைத் தகவல்கள் கூறுகின்றன.

போராட்டக்காரர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது வழமை என்றபோதும், நேற்று அவ்வாறு நடக்கவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கானவர்களில் பெரும்பாலானோர் வயிற்றுப் பகுதியில் காயடைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-எ-இ)

## அமெரிக்கா...

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜியூன் சங் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து விதமான வன்முறைகளையும் கண்டிக்கின்றேன் என்று தெரிவித்துள்ள அவர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், பொலிஸார் மற்றும் அனைத்துத் தரப்பில் இருந்தும் அமைதியைக் கோருகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான, வெளிப்படையான விசாரணை அவசியம் என்றும், அமைதியான போராட்டத்துக்கான மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## ஊரடங்கு...

யாக நடைமுறைக்கு வரும் வகையில் நேற்று இரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மறு அறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ-எ-இ)

## இன்று முதல்...

300க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களை உள்ளடக்கியுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்திருக்கின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் ஆட்சியிலுள்ள அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தும் போராட்டங்கள் தீவிரமாகியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த அறிவிப்பால் நாட்டின் இயல்பு நிலைமை முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே நெருக்கடிகளைச் சந்தித்துள்ள ராஜபக்ச அரசாங்கத்துக்கு இது நெருக்கடிகளை அதிகமாக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேநேரம் இன்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதிவரையான ஒரு வார காலத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான நகரங்களில் பெரும் எண்ணிக்கையானோரைத் திரட்டிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலும் இந்த அழைப்புக்கு ஆதரவு கிடைத்துள்ளது. ஆயினும் இது தொடர்பாக வெளிப்படையான அறிவிப்புக்கள் விடுக்கப்படாதபோதும், இந்தப் போராட்டத்துக்கு தார்மீக ஆதரவு வழங்குவது என்ற முடிவைப் பல தரப்புகளும் எடுத்துள்ளன என்று அறிய முடிகின்றது. எதிர்வரும் நாள்களில் இது தொடர்பான அறிவிப்புக்கள் வெளியாகலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ-எ-இ)

# இயந்திர விரல் அடையாளப் பதிவை தற்காலிகமாக நிறுத்தக் கோரிக்கை!

சாவகச்சேரி, ஏப். 20

அரச அலுவலகங்களில் தற்போது காணப்படும் விரல் அடையாள வரவுப் பதிவு இயந்திரத்தின் செயற்பாடுகளை சிறிது காலம் நிறுத்தி வைக்குமாறு அரச அலுவலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, விலையேற்றம் ஆகியவற்றால் தூரப் பிரதேசங்களிலிருந்துபணிக்குவருவது சிரமமாகவுள்ளது. அத்தோடு எரிபொருள் தட்டுப்பா[illegible] அலுவலகத்து[illegible] ஏற்படுகின்றது.

அதனை ஈடுசெய்ய மாலையில் கடமையாற்ற வேண்டியுள்ளது. இதனால் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில் அலுவலகங்களுக்கு வந்து கடமையாற்றுவ[illegible]திவு இயந்திரப் பயன்[illegible]காலம் நிறுத்தி வைக்குமாறும், இவை சாத்தியப்படாத பட்சத்தில் போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் தமது சொந்த இருப்பிடத்துக்கு அருகிலுள்ள அலுவலகங்களில் கடமையாற்ற தற்காலிக இடமாற்றம் செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்களுக்கு விலைச் சூத்திரம்!

எரிபொருள்களின் விலை தொடர்பான புதிய விலைச்சூத்திரம், எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாளாந்தம் 1.6 பில்லியன் ரூபா நட்டத்தைக் குறைக்கும் வகையில் எரிபொருள் விலை திருத்தப்படவேண்டும்.

உரிய நேரத்தில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கும், எரிபொருளைப் பரவலாகக் கிடைக்கச் செய்வதற்கும், எரிபொருள் விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும். அமைச்சு தொடர்பான பிரச்சினைகளைச் சீர்செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும். மின் உற்பத்திக்குப் போதுமான எரிபொருளைக் கிடைக்கச் செய்தல், தடையில்லா இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் கட்டடத்திறனை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் - என்றார். (சு-இ)


### பணிப்பெண் தேவை

வேலணையில் உள்ள வீடொன்றுக்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

**074 276 8766**

### உடனடி வேலை வாய்ப்பு

யாழ்நகர் மத்தியில் இயங்கும் பிரபல அழகுசாதன பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்திற்கு வேலையாள்கள் (பெண்கள்) தேவை.

(CS 19389) (3/6) தொடர்பு : **077 725 1036**

### உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகர் பகுதியில் புதிதாக ஆரம்பித்திருக்கும் Burger Hut ஒன்றிற்கு வேலையாள்கள் (ஆண்/ பெண்) தேவை.

(CS 19388) (3/6) தொடர்பு : **077 725 1036**

### உடன் வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான **ஐஸ்கிறீம் கடையில்** பணியாற்றுவதற்கு பணியாளர்கள் உடன்தேவை.
வயது 18 தொடக்கம் 45 வரை
(தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்)

**077 378 8746**

(CS 0095) (2/6)

### வேலையாள்கள் தேவை

இல. 25 நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Mayoora distributers நிறுவனத்திற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

1) Data entry operator (பெண்)
2) Billing (ஆண் / பெண் )
3) Delivery boy

தொடர்புகொள்ளும் நேரம்: 9.00 am - 6.30 pm

தொலைபேசி இலக்கம்: **077 615 1369**

(CS 19403) (2/6)

### முதலாம் ஆண்டு நினைவும் திவச அழைப்பும்





மயிலை மடியில்
16 . 08 . 1938

மண்ணில் மடியில்
30 . 04 . 2021

அமரர்
**திரு. வை.மு.சுப்பிரமணியம்**

ஆணிவேராய் எம்மை காத்து நின்ற
எங்கள் குடும்பத்தின் குத்துவிளக்கே
விழுதுகள் நாம் ஏங்குகிறோம் தவிக்கிறோம்
ஆண்டுகள் ஒன்றாகியும் ஆறவில்லை எம் மனம்
விழிகளில் கண்ணீர் இன்னும் காயவில்லை
காலங்கள் உருண்டோடினாலும் மாறாது
என்றென்றும் உங்கள் நினைவலைகள்

**இன்று (20/04 /2022) புதன்கிழமை** அன்னாரின் இல்லத்தில் காலை 10 மணி அளவில் நடைபெறும் கிரியையிலும், அதைத் தொடர்ந்து நண்பகல் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

183/1 கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்
(0094) 0777 48 87 41

(CS 19416 ) (4/6)

மனைவி, மக்கள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்

### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

சுண்டிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் A32 பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி. A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப்பாதைகள் உள்ளன. 14 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல தண்ணீர் கட்டுக் கிணற்றுடன் பயன்தரும் தென்னைகள் உள்ளன.

**பார்வையிடும் நேரம்**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை,**
**ஒரு பரப்பின் விலை 450000.00**
**(தரகர் தேவையில்லை)**

ஜெயம்:-
**077 814 7389, 077 241 7589**

### முதலாம் ஆண்டு நினைவு தின ஆத்ம சாந்தி பிரார்த்தனை அழைப்பு



கடந்த 30.04.2021 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடுபத்தலைவர்

**அமரர் சின்னத்துரை ஜெகநாதன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று 20.04.2022 புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

(CS 19368) (3/6)

### மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 09 . 1933



மறைவு
19 . 04 . 2022

**வல்லிபுரம் இராமச்சந்திரன்**

(முன்னாள் பிரதம கணக்காளர் யாழ். கச்சேரி)

யாழ். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், துன்னாலை, ஆஸ்திரேலியா, சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராமச்சந்திரன் (முன்னாள் பிரதம கணக்காளர் யாழ். கச்சேரி) நேற்று (19-04-2022) செவ்வாய்க்கிழமை அதிகாலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் மகனும், பொன்னம்மா (இந்திராணி) அவர்களின் அன்புக் கணவரும், சந்திரகுமாரி (சிட்னி), மதிவாணன் (சிட்னி), மணிவண்ணன் (மெல்போர்ன்), ஸ்ரீரமணன் (சிட்னி), கோபிரமணன் (சிட்னி), கோகுலரமணன் (சிட்னி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கதிர்காமநாதன்(சிட்னி) ஸ°லிம் (சிங்கப்பூர்), துஷ்யந்தி (மெல்போர்ன்), ப்ரியதரிசனி (சிட்னி), அஜித்தா (சிட்னி), காயத்ரி (சிட்னி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன் (வட்டகச்சி), ஜானச்சந்திரன் (புலோலி) மற்றும் கலாநிதி புவனச்சந்திரன் (சிட்னி), குலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமரன் (மெல்போர்ன்), ஷாரு (சிட்னி), அபர்ணா (சிட்னி) ஆராதனா (சிட்னி) கார்த்தினி (சிட்னி) ரக்ஸன் (சிட்னி) ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் (23.04.2022) சனிக்கிழமை அவுஸ்ரேலியா நேரம் பி.ப.3.00 - 6.00 Liberty Funerals Granville, 101 South St, Granville NSW 2142 இல் பார்வைக்கு வைக்கப்பட்டு தகனக்கிரியைகள் எதிர்வரும் (24.04.2022) அவுஸ்ரேலிய நேரம் மு.ப.10.30 இற்கு North Chapel, Pine Grove Crematorium, Minchinbury இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

சந்திரகுமாரி
(மகள் + 612 963 63940 & 61 450 901 852)

மதிவாணன்
(மகன் + 614 317 37694)

மணிவண்ணன்
(மகன் + 614 009 13 326)

சிறி ரமணன்
(மகன் + 61 439 461 521)

கோபிரமணன்
(மகன் + 61 413 159 681)

கோகுலரமணன்
(மகன் + 61 425 358 612)

(cs 19410) (2/6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.